FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8044317

07/AC/2021

1. District மாவட்டம் : நாமக்கல் | PS காவல்நிலையம்: ஊ.த.க.பிரிவு நாமக்கல் | Year ஆண்டு: 2021 | FIR No. முதஅ. எண்: | Date நாள்: 28.12.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act, 1988 as amended | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: in 2018. | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : | Date to நாள் வரை :
Time Period நேர அளவு | Time from நேரம் முதல் : | Time to நேரம் வரை :

1) 02.12.2021 - காலை சுமார் 6.45 மணி & பகல் சுமார் 14.00 மணி
2) 03.12.2021 - காலை சுமார் 7.00 மணி
3) 07.12.2021 - பகல் சுமார் 14.00 மணி
4) 24.12.2021 - காலை சுமார் 5.45 மணி
5) 28.12.2021 - காலை சுமார் 8.45 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.12.2021 | Time நேரம் : 11.00 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 28.12.2021 / VOL. IV | Time நேரம் : 17.00 மணி

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய்மொழியாக~~ கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் இலக்கியம்பட்டி நவணி கிராமம், நாமக்கல் மாவட்டம். சுமார் 20 கி.மீ. வடக்கு.

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. செல்வம் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் குப்புசாமி

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 வயது | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் விவசாயம் | (g) Address : முகவரி 20/78, இலக்கியம்பட்டி, நவணி கிராமம் நவணி ஊராட்சி, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பிரபாகரன், BDO ஓவர்சியர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் புதுசத்திரம், நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) -

பணிந்துறைப்பப்படுகிறது;

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed அ.செல்வம் Rank காவல் ஆய்வாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS ................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு K. Selvam 28/12/21

Signature of the Officer in-charge, Police Station 28/12/2021
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.12.2021 - 18.00 மணி

Name: பெயர் அ.செல்வம்
Rank: நிலை ........................No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
உ.கு.க. பிரிவு
நாமக்கல்.

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/AC/2021 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 28.12.2021-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 14.15 மணிக்கு காவல் ஆய்வாளராகிய ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, புகார்தாரர் திரு.K.செல்வம், (வயது-45), S/o.குப்புசாமி, கதவு எண்.20/78 இலக்கியம்பட்டி, நவணி கிராமம், நவணி ஊராட்சி, நாமக்கல் மாவட்டம் என்பவர் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமான புகாரினை நாமக்கல் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.இராமச்சந்திரன் அவர்களிடம் சமர்ப்பித்ததை, காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று, அதில் மேலொப்பம் செய்து மேல்நடவடிக்கைக்காக என்னிடம் வழங்கினார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புதல் K. செல்வம் (வயது-45), S/o. குப்புசாமி, கதவு எண். 20/78 இலக்கியம்பட்டி, நவணி கிராமம், நவணி ஊராட்சி, நாமக்கல் மாவட்டம். செல்: 9994551847. பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல். ஐயா, நான் இலக்கியம்பட்டியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எங்களுக்கு சொந்தமாக நவணி கிராமத்தில் சுமார் 5 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் விவசாயம் செய்து வருகிறோம். நானும், எனது தம்பி திரு.ரமேஷ்-ம் நவணி கிராமத்திற்குட்பட்ட இலக்கியம்பட்டியில் உள்ள எங்களது பூர்வீக வீட்டில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். எங்களது விவசாய நிலத்தில் விவசாயம் செய்ய அதிகமாக தண்ணீர் தேவைப்பட்டதால், நவணி கிராமத்தில் உள்ள சர்வே எண்.573/7A ல் எனது பெயரில் உள்ள நிலத்தில் உள்ள ஒரு போர்வெல்லுக்கும், நவணி கிராமத்தில் உள்ள சர்வே எண்கள.573/8A, எண்.573/10A-ல் எனது தம்பி ரமேஷ் பெயரில் உள்ள நிலத்தில் இரண்டு போர்வேல்களுக்கும் தத்தாத்திரிபுரம் EB ஆபீசில் தனித்தனி விவசாய மின் இணைப்பு வாங்குவதற்கு முடிவு செய்து விபரம் கேட்டபோது, நில ஆவணங்களின் நகல்கள், பஞ்சாயத்தில் போர்வெல் இருப்பதற்கான சான்றும், புதுச்சத்திரம் BDO ஆபீசில் NOC சான்றும் வாங்கி வரச் சொன்னார்கள். அதனால், நான் 30.11.2021-ம் தேதி நவணி தோட்டக்கூர்பட்டி பஞ்சாயத்து ஆபீஸ் சென்று போர்வெல் ஒன்றுக்கு தலா ரூ.250/- வீதம் 3 போர்வெல்லுக்கும் ரூ.750/- பணம்

கட்டினேன். அதற்காக எனது பெயரிலும், எனது தம்பி ரமேஷ் பெயரிலும் தனித்தனியாக ரசீதுகள் கொடுத்தார்கள். பின்னர் 01.12.2021-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு புதுச்சத்திரம் BDO ஆபீஸ்க்கு சென்று NOC சான்று கோரும் விண்ணப்பம் மனு கொடுப்பது சம்மந்தமாக விசாரிக்கச் சென்றேன். அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த BDO டிரைவர் திரு.பிரபாகரன் என்பவர் என்னிடம் ஆபீஸ் வந்த விசயம் குறித்து கேட்டார். நான் NOC சான்று வாங்க வந்த விபரத்தைச் சொன்னேன். அவர் உடனே, அப்ளிகேசன் ஒன்றை அந்த அலுவலகத்தின் உள்ளிருந்து எடுத்து வந்து என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டு, நில ஆவணங்களின் நகல்களையும், நான் பஞ்சாயத்து ஆபீசில் வாங்கிச் சென்ற ரசீதையும் அதனுடன் இணைத்து வைத்துக் கொண்டு, அவரே BDO அவர்களிடம் கையெழுத்து வாங்கி கொடுத்துவிடுவதாகச் சொல்லி அந்த அப்ளிகேசனை அவரிடமே வைத்துக் கொண்டார். அப்போது, நான் அவரிடம் ஏதாவது ஆபீசில் பீஸ் கட்ட வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர், பீஸ் எதுவும் கட்டத் தேவையில்லை என்று சொன்னார். பின்னர், அவர் நாளை காலை என்னுடைய நிலத்திற்கு வந்து போர்வெல் இருக்கும் இடத்தை இன்ஸ்பெக்சன் பார்க்க வருவதாகச் சொன்னார். அதனால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். அடுத்த நாள் 02.12.2021-ஆம் தேதி காலை சுமார் 6.45 மணிக்கு நான் வீட்டில் இருந்த போது, BDO டிரைவர் திரு.பிரபாகரன் எனது வீட்டிற்கு வந்தார். அப்போது எனது தம்பி ரமேஷ் உடன் இருந்தார். எங்களது நிலத்தில் போர்வெல் இருக்கும் இடத்தை பார்வையிட்டு அவரது செல்போனில் போட்டோ எடுத்துக் கொண்டார். அவருடைய செல்போன் 94426-86857 என்ற எண்ணை என்னிடம் சொன்னார், நான் எனது செல்போனில் பதிவு செய்து கொண்டேன். அப்போது அவர் தானே எல்லா வேலைகளையும் செய்து முடித்துக் கொடுத்துவிடுவதாகவும், அதற்கு கொஞ்சம் செலவாகும் எனவும், ஒரு போர்வெல்லுக்கு ரூ.1,600/- வீதம் மொத்தம் ரூ.4,800/- கொடுத்து விடுங்கள் என்றும் சொன்னார். அதற்கு நான், என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று சொன்னேன். நீங்கள் பணம் ரெடி செய்து கொண்டு காலை 11.00 மணிக்கு மேல் ஆபீஸ்க்கு வந்துவிடுங்கள், பணம் கொண்டு வரும்போது எனக்கு போன் செய்துவிட்டு வாருங்கள், பணம் கொடுத்தால் தான் NOC சான்று ரெடியாகும், நான் அதற்கு ஏற்பாடு செய்து வாங்கி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். நான் எனது சொந்த வேலை காரணமாக நாமக்கல் சென்றுவிட்டேன். அன்று மதியம் சுமார் 2.00 மணிக்கு BDO டிரைவர்

திரு.பிரபாகரன் அவர்களுக்கு போன் செய்து NOC ரெடியாகிவிட்டதா என்று நான் அவரிடம் கேட்டேன். அதற்கு அவர் இன்றைக்கு செக்சன் கிளார்க் லீவில் உள்ளார், இன்றைக்கு ரெடியாகவில்லை, நான் NOC ரெடியானதும் சொல்கிறேன் நான் ஏற்கனவே கேட்ட பணத்தை கொண்டு வந்து கொடுத்துவிட்டு வாங்கிச் செல்லுங்கள் என்று சொன்னார். பின்னர் 03.12.2021-ம் தேதி காலை சுமார் 7.00 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் எனது வீட்டிற்கு வந்தார். அப்போது நான் அவரிடம் NOC சான்றிதழ் பற்றி கேட்டேன். அதற்கு அவர் NOC இன்னும் ரெடியாகவில்லை, நான் கேட்ட பணம் ரூ.4,800/-ஐ கொடுத்தால், நான் ஆபீஸ் சென்று ஏற்பாடு செய்துவிடுகிறேன், இப்போது பணத்தைக் கொடுங்கள், இன்று மாலைக்குள் நீங்கள் NOC வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னார். அதற்கு நான் என்னிடம் அவ்வளவு பணம் தற்போது இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் நான் உங்களது தம்பி பெயரில் ரூ500/- வீதம் 3 கொடிநாள் ரசீதுகள் போட்டுக் கொண்டு வந்துவிட்டேன். அதற்கு தனியாக ரூ.1,500/- தரவேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் கொடிநாளுக்கு ரூ.1,500/- தனியாகவும், அதில்லாமல் ரூ.4,800/- கொடுக்கணுமா என்று கேட்டேன். அதற்கு பிரபாகரன் ஆமாம் என்று சொன்னார். நான் அவ்வளவு ரெடி பண்ண முடியாது என்று சொன்னேன். உடனே பிரபாகரன் சரி கொடிநாளுக்கு ரூ.1,500/- கொடுத்திடுங்க, அதில்லாமல் ஒரு போர்வெல்லுக்கு ரூ.1,000/- வீதம் ரூ.3,000/- கொடுத்துடுங்க என்று சொல்லி, எனது தம்பி ரமேஷ் பெயரில் எழுதப்பட்டிருந்த தலா ரூ.500/-க்கான 3 கொடிநாள் ரசீதுகள் 54214, 54215, 54216 ஆகியவற்றை என்னிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். பின்னர் 07.12.2021-ம் தேதி நான் வீட்டில் இருந்த போது BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் எனக்கு போன் செய்து புதுச்சத்திரம் RGR பள்ளிக்கூடம் அருகே உள்ள மாரியம்மன் கோவில் அருகில் நான் கேட்ட பணத்துடன் வந்துவிடுங்கள், நான் அங்கு வருகிறேன் NOC சான்றிதழ் வாங்கிக் கொள்ளலாம் என்று சொன்னார். அதனால் நான் அன்று பகல் சுமார் 2 மணிக்கு மேல் புதுச்சத்திரம் RGR பள்ளிக்கூடம் அருகே உள்ள மாரியம்மன் கோவில் அருகில் சென்று காத்திருந்தேன். அங்கு வந்த BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் என்னிடம் நான் கேட்ட பணத்தை கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் ரூ.1,500/- மட்டும் கொண்டு வந்துள்ளதாக

சொல்லி பணம் ரூ.1,500/- அவரிடம் கொடுத்தேன். அதை பெற்றுக் கொண்ட பிரபாகரன் அவர்கள், அவர் வைத்திருந்த ஆபீஸ் நோட்டில் கையெழுத்து போடச் சொல்லி, மூன்று இடங்களில் என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார். பின்னர் அவர் என்னிடம், நீங்கள் கொடுத்த பணம், நான் உங்களிடம் கொடுத்திருந்த கொடிநாள் ரசீதுகளுக்கு சரியா போச்சு, மீதி நான் கேட்ட பணம் ரூ.3,000/-த்தை கொடுங்க, அப்போது தான் உங்களுக்கு NOC சான்றிதழ் கிடைக்கும், பணத்தை ரெடி பண்ணிகிட்டு BDO ஆபீஸ் வாருங்கள் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். அடுத்த நாள் 08.12.2021-ம் தேதி மாலை 3 மணிக்கு மேல் நான் புதுச்சத்திரம் BDO ஆபீஸ்க்கு சென்றேன். அங்கு பணியில் இருந்த இலக்கியம்பட்டியைச் சேர்ந்த திரு.ஈஸ்வரன் அவர்கள் என்னிடம் என்ன வேலையாக வந்திருக்கீங்க என்று கேட்டார். நான் போர்வெல்லுக்கு NOC சான்று வாங்க BDO அவர்களை பார்க்க வந்துள்ளதாகச் சொன்னேன். அதற்கு அவர் ஆபீசில் BDO இல்லை, NOC சான்றிதழ் வேலைகளை BDO டிரைவர் பிரபாகரன் தான் பார்க்கிறார், அவரையே பாருங்கள் என்று சொன்னார். அதனால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மீண்டும் 22.12.2021-ம் தேதி காலை சுமார் 11.30 மணிக்கு நான் புதுச்சத்திரம் BDO ஆபீஸ் சென்றேன். அங்கு பணியில் இருந்த திரு.ஈஸ்வரன் அவர்கள் என்னைப் பார்த்தவுடன், இன்னும் NOC சான்று வாங்கவில்லையா என்று கேட்டார். அதற்கு நான் இன்னும் பிரபாகரன் என்னிடம் கொடுக்கவில்லை, அதனால் தான் ஆபீசில் BDO அவர்களை பார்க்க வந்துள்ளதாகச் சொன்னேன். அதற்கு அவர் NOC சான்றிதழ்களை பிரபாகரன் தான் வாங்கி வைத்திருப்பார், அவரையே பாருங்கள் என்று சொன்னார். அதற்கு நான் BDO அவர்களை பார்த்துவிட்டு செல்கிறேன் என்று சொன்னதற்கு, அவர் BDO-வை பார்க்க தேவையில்லை, நீங்க பிரபாகரனிடமே பேசிக் கொள்ளுங்கள் என்று சொல்லி அவருடைய செல்போனிலிருந்து பிரபாகரனுக்கு நான் வந்துள்ள விபரம் சொல்வதற்காக போன் செய்தார். அப்போது பிரபாகரன் அவர்கள் போனை எடுக்கவில்லை. அதனால் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் 24.12.2021-ம் தேதி காலை சுமார் 8.45 மணியளவில் BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் 8072135695 என்ற செல்போன் எண்ணிலிருந்து எனக்கு போன் செய்து பேசினார். உங்களுக்கு NOC சான்றிதழ் ரெடியாகிவிட்டது, நான் கேட்ட ரூ.3,000/- பணத்துடன் ஆபீஸ்க்கு வந்துவிடுங்கள்

என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை, கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடம் கேட்டேன், அதற்கு அவர், அப்படியானால், இப்போது ரூ.1,000/-ம் மட்டும் ரெடி செய்து கொண்டு வந்து கொடுத்திடுங்க, மீதியை அப்புறம் நான் வாங்கிக் கொள்கிறேன், ஆனால் பணம் கொடுத்தால் தான் உங்களுக்கு NOC சான்றிதழ் கொடுக்கமுடியும் என்று சொல்லி போனை கட் செய்துவிட்டார். இன்று 28.12.2021-ஆம் தேதி காலை சுமார் 8.45 மணிக்கு புதுச்சத்திரம் BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் எங்கள் வீட்டின் வழியாக பைக்கில் சென்றவர், நான் வீட்டில் இருந்ததை பார்த்து வண்டியை நிறுத்தி என்னிடம் பக்கத்தில் வேலப்பன் த/பெ.முத்துகவுண்டர் தோட்டத்திற்கு NOC சான்றிதழ் சம்பந்தமாக போர்வெல்லை பார்க்க சென்றதாக சொல்லிவிட்டு, ஏன் இன்னும் நீங்க பணம் ரெடிபண்ணிட்டு வந்து என்னை பார்க்கல, சீக்கிரம் நான் சொன்ன பணத்தை ரெடிபண்ணிட்டு எனக்கு போன் பண்ணுங்க, அப்பதான் NOC சான்றிதழ்களை கொடுக்க முடியும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார். புதுச்சத்திரம் BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுத்து எங்களுடைய போர்வெல்களுக்கு மின் இணைப்பு பெறுவதற்கான NOC சான்றிதழ்கள் பெற விருப்பமில்லை. ஆகையால், எனக்கு NOC சான்றிதழ்கள் பெற்றுத்தர லஞ்சமாக ரூ.1,000/- பணம் கேட்கும் புதுச்சத்திரம் BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்கள் மீது சட்டப்படி தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxxxx K.Selvam) 28/12/21.

மேற்கண்ட புகார் மனுவை படித்துப்பார்த்தும், புகாரின் உண்மைத் தன்மை குறித்தும், புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், வழக்கின் எதிரி புதுச்சத்திரம் BDO டிரைவர் திரு.பிரபாகரன் அவர்களுக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 28.12.2021-ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.09/AC/2021, u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி மேற்படி எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார் மனு அசல், புகார்தாரர் ஆஜர் செய்த திரு.ரமேஷ் என்பவரின் பெயரிலான 3.12.2021 தேதியிட்ட கொடிநாள் ரசீதுகள்-3 ஆகியவற்றை மாண்பமை தனிநீதிபதி/தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

(M. நல்லம்மாள்) 28/12/2021
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.